# பிரார்த்தனை

## (மஹத்துவம் மற்றும் உதாரணங்கள்)

[Prayer (Importance and Examples) - Tamil]

### முன்னுரை

அதிகாலையில் வீட்டு வாசலை சாவி கொண்டு திறக்கும் முன்பும், மீண்டும் இரவில் பூட்டும்போதும் பிரார்த்தனையுடன் செய்வதில் ஒரு உன்னதமான தத்துவம் உள்ளது. நமது அன்றாட அவசர வாழ்க்கையின் நெரிசலில் நாம் நமது நிம்மதியை இழந்து விடுகிறோம். இழந்த மனநிம்மதியை நாம் மறுபடி பிரார்த்தனை மூலம் பெறலாம். நமது பிரார்த்தனை நமது நம்பிக்கையை வலுப்படுத்தி இறைவனின் அருளையும் ஆசியையும் பெற்றுத் தருவதால், பிரார்த்தனையின் மூலம் முடியாததையும் சாதித்துக் காட்டலாம். விஞ்ஞானிகளாலும் பிரார்த்தனையின் முக்கியத்துவம் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஜப்பானைச் சேர்ந்த டாக்டர் மாசாரு இமோடோ என்ற விஞ்ஞானி பிரார்த்தனையின் மூலம் நல்ல ஆரோக்கியத்தைப் பெற இயலும் என்று

கூறுகிறார். கடவுள் தத்துவத்தை உணருவதற்கான ஸாதனா மார்க்கத்தில் செல்லும் ஸாதகர்களுக்கு, இறைவனுடன் இடையறாது தொடர்பு கொள்வதற்கு பிரார்த்தனை ஒரு விலைமதிப்பற்ற கருவியாக துணை புரிகிறது.

இந்தக் கையடக்கமான புத்தகத்தில், மாணவர்கள், குடும்பத்தலைவிகள், அலுவலகத்தில் வேலை செய்பவர்கள், பொறியாளர்கள், மருத்துவர்கள், வயலில் வேலை செய்யும் விவசாயிகள், ஸாதகர்கள், தர்மாபிமானிகள், தேச பக்தர்கள் ஆகிய எல்லாத் தரப்பினர்களுக்கும் உபயோகமாகக் கூடிய எளிய பிரார்த்தனைகள் அடங்கி உள்ளன. மேலும் தினஸரி பூஜையின்போதும், புனிதமான விழாக்கள், மத சம்பந்தமான விழாக்களின்போதும், தினஸரி அலுவல்களின்போதும், நோயுற்றபோதும், ஒரு

பொருளை வாங்கும்போதும் எவ்வாறு பிரார்த்தனை செய்ய வேண்டும் என்பதையும் வாசகர்கள் இச்சிறு புத்தகத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இச்சிறு புத்தகத்தைப் பயன்படுத்தி, அதன் மூலம் எல்லா மக்களும், இறைவனது ஆசி-யுடன் கூடிய வெற்றிகரமான வாழ்க்கையை அடைய வேண்டும் என்பதே குரு சரணங்-களில் நாம் செய்யும் பிரார்த்தனை.

**- தொகுத்தவர்**


ஸனாதனின் ஸாத்வீக நூல்!

**நாமஜபத்தின் முக்கியத்துவமும் நன்மைகளும்**

- நாமம் பாவிகளையும் எவ்வாறு கடைத்தேற்றுகிறது?
- நாமத்தால் துக்க நிவாரணம் எவ்வாறு ஏற்படுகிறது?



# அட்டவணை


1. தோற்றமும் அர்த்தமும் 9

2. முக்கியத்துவம் 10

3. நன்மைகள் 4. பிரிவுகள் 14

5. பிரார்த்தனை, எந்தக் கட்டுப்பாடும் இல்லாத ஸாதனையாகும் ! 22

6. யாரிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்? 24

7. எவ்வாறு பிரார்த்தனை செய்வது? 26

8. பிரார்த்தனையில் நேரும் தவறுகள் 36

9. பிரார்த்தனையின் உதாரணங்கள் 38

10. ஹிந்துதர்மப்படி ஆயிரம் வருஷங்களுக்கு முன்பே குறுப்பிட்டுள்ள பிரார்த்தனைகளின் முக்கியவத்துவத்தை தற்போதுதான் வெளி-நாட்டவர் உணரத் துவங்கியுள்ளனர்! 74

11. பிரார்த்தனையுடன் ஸாதனையின் எல்லா அங்கங்களும் இணையும்போது தான் ஜீவனுக்கு நிரந்தரமான ஆனந்தம் கிட்டும்! 77